ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 3.4 – ஒருகுறளாய்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.4 – ஒருகுறளாய்

‡ ஒரு குறளாய் இரு நிலம் மூவடி மண் வேண்டி ⋆
உலகனைத்தும் ஈர் அடியால் ஒடுக்கி ⋆
ஒன்றும் தருக எனா மாவலியைச் சிறையில் வைத்த ⋆
தாடாளன் தாள் அணைவீர் ⋆
தக்க கீர்த்தி அரு மறையின் திரள் நான்கும் வேள்வி ஐந்தும் ⋆
அங்கங்கள் அவை ஆறும் இசைகள் ஏழும் ⋆
தெருவில் மலி விழா வளமும் சிறக்கும் ⋆
காழிச் சீராம விண்ணகரே சேர்மின் நீரே ‖ **3.4.1** ‖

நான்முகன் நாள் மிகைத் தருக்கை இருக்கு வாய்மை ⋆
நலமிகு சீர் உரோமசனால் நவிற்று ⋆
நக்கன் ஊன் முகமார் தலை ஓட்டூண் ஒழித்த எந்தை ⋆
ஒளி மலர்ச் சேவடி அணைவீர் ⋆
உழு சேயோடச் சூல் முகமார் வளை அளைவாய் உகுத்த முத்தை ⋆
தொல் குருகு சினை என்னச் சூழ்ந்தியங்க ⋆
எங்கும் தேன் முகமார் கமல வயல் சேல் பாய் ⋆
காழிச் சீராம விண்ணகரே சேர்மின் நீரே ‖ **3.4.2** ‖

வை அணைந்த நுதிக் கோட்டு வராகம் ஒன்றாய் ⋆
மண் எல்லாம் இடந்தெடுத்து மதங்கள் செய்து ⋆
நெய் அணைந்த திகிரியினால் வாணந் திண் தோள் ⋆
நேர்ந்தவன் தாள் அணைகிற்பீர் ⋆
நெய்தலோடு மை அணைந்த குவளைகள் தம் கண்கள் என்றும் ⋆

மலர்க் குமுதம் வாய் என்றும் கடைசிமார்கள் ⋆
செய் அணைந்து களை களையா தேறும் ⋆
காழிச் சீராம விண்ணகரே சேர்மின் நீரே ‖ **3.4.3** ‖

பஞ்சிய மெல் அடிப் பின்னை திறத்து ⋆
முன் நாள் பாய் விடைகள் ஏழ் அடர்த்து பொன்னன் பைம் பூண் ⋆
நெஞ்சிடந்து குருதியுக உகிர் வேல் ஆண்ட ⋆
நின்மலன் தாள் அணைகிற்பீர் ⋆
நீல மாலைத் தஞ்சுடைய இருள் தழைப்பத் தரளம் ஆங்கே ⋆
தண் மதியின் நிலாக் காட்டப் பவளம் தன்னால் ⋆
செஞ்சுடர் வெயில் விரிக்கும் அழகார் ⋆
காழிச் சீராம விண்ணகரே சேர்மின் நீரே ‖ **3.4.4** ‖

தெவ்வாய மற மன்னர் குருதி கொண்டு ⋆
திருக் குலத்தில் இறந்தோர்க்குத் திருத்தி செய்து ⋆
வெவ்வாய மா கீண்டு வேழம் அட்ட ⋆
விண்ணவர் கோன் தாள் அணைவீர் ⋆
விகிர்த மாதர் அவ்வாய வாள் நெடுங்கண் குவளை காட்ட ⋆
அரவிந்தம் முகம் காட்ட அருகே ஆம்பல் ⋆
செவ்வாயின் திரள் காட்டும் வயல் சூழ் ⋆
காழிச் சீராம விண்ணகரே சேர்மின் நீரே ‖ **3.4.5** ‖

பைங்கண் விறல் செம் முகத்து வாலி மாளப் ⋆
படர் வனத்துக் கவந்தனொடும் படையார் திண்கை ⋆
வெங்கண் விறல் விராதன் உக வில் குனித்த ⋆
விண்ணவர் கோன் தாள் அணைவீர் ⋆
வெற்புப் போலும் துங்க முக மாளிகை மேல் ஆயம் கூறும் ⋆
துடி இடையார் முகக் கமலச் சோதி தன்னால் ⋆

திங்கள் முகம் பனி படைக்கும் அழகார் ⋆
காழிச் சீராம விண்ணகரே சேர்மின் நீரே ॥ **3.4.6** ॥

பொருவில் வலம் புரி அரக்கன் முடிகள் பத்தும் ⋆
புற்று மறிந்தன போலப் புவிமேல் சிந்த ⋆
செருவில் வலம் புரி சிலைக் கை மலைத் தோள் வேந்தன் ⋆
திருவடி சேர்ந்துய்கிற்பீர் ⋆
திரை நீர்த் தெள்கி மருவி வலம்புரி கைதைக் கழி ஊடாடி ⋆
வயல் நண்ணி மழை தரு நீர் தவழ் கால் மன்னி ⋆
தெருவில் வலம்புரி தரளம் ஈனும் ⋆
காழிச் சீராம விண்ணகரே சேர்மின் நீரே ॥ **3.4.7** ॥

பட்டரவேர் அகல் அல்குல் பவளச் செவ்வாய் ⋆
பணை நெடுந் தோள் பிணை நெடுங்கண் பாலாம் இன் சொல் ⋆
மட்டவிழும் குழலிக்கா வானோர் காவில் ⋆
மரம் கொணர்ந்தான் அடி அணைவீர் ⋆
அணில்கள் தாவ நெட்டிலைய கருங்கமுகின் செங்காய் வீழ ⋆
நீள் பலவின் தாழ் சினையில் நெருங்கு ⋆
பீனத் தெட்ட பழம் சிதைந்து மதுச் சொரியும் ⋆
காழிச் சீராம விண்ணகரே சேர்மின் நீரே ॥ **3.4.8** ॥

பிறை தங்கு சடையானை வலத்தே வைத்துப் ⋆
பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து ⋆
கறை தங்கு வேல் தடங்கண் திருவை மார்பில் ⋆
கலந்தவன் தாள் அணைகிற்பீர் ⋆
கழுநீர் கூடித் துறை தங்கு கமலத்துத் துயின்று ⋆
கைதைத் தோடாரும் பொதி சோற்றுச் சுண்ணம் நண்ணி ⋆

சிறை வண்டு களி பாடும் வயல் சூழ் ⋆
காழிச் சீராம விண்ணகரே சேர்மின் நீரே ॥ **3.4.9** ॥

‡ செங்கமலத்தயன் அனைய மறையோர் ⋆
காழிச் சீராம விண்ணகர் என் செங்கண் மாலை ⋆
அங்கமலத் தட வயல் சூழ் ஆலி நாடன் ⋆
அருள் மாரி அரட்டமுக்கி அடையார் சீயம் ⋆
கொங்குமலர்க் குழலியர் வேள் மங்கை வேந்தன் ⋆
கொற்ற வேற் பரகாலன் கலியன் சொன்ன ⋆
சங்க முகத் தமிழ் மாலை பத்தும் வல்லார் ⋆
தடங்கடல் சூழ் உலகுக்குத் தலைவர் தாமே ॥ **3.4.10** ॥

அடிவரவு — ஒருகுறள் நான்முகன் வை பஞ்சிய தெவ்வாய பைங்கண் பொருவில் பட்டு பிறை செங்கமலத்து வந்து

ஒருகுறளாய் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்